மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை

(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)

முன்னிலை : திரு. எஸ். வடிவேல், பி.எஸ்.சி, பி.எல்.,
I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை
2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாள் வியாழன் கிழமை

மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 1012/2023
(CNR No.TNCH09-001668-2023)

Mr. N. Karuppan,
S/o. Natarajan,
No. 3/17, Akshaya F-3,
T.P. Scheme Road,
Raja Street, R.A. Puram,
Chennai - 600028. .... Petitioner

//Versus//

1. Mr. P. Jayabal,
S/o. Periyasamy
No. 5/39, West Street,
Ayan Kunjaram (Post),
Ulundurpet, Tamilnadu - 607201.

2. National Insurance Co. Ltd.
TP Cell, Murugesa Naicker Complex,
First Floor, No.66, Greams Road,
Chennai-600006.

3. HDFC ERGO General Ins. Co. Ltd.
R.R. TOWERS, II PHASE, 2nd Floor,
No.94/95, T.V.K. Ind. Estate,
Guindy, Chennai - 600 032. .... Respondents

இம்மனு 28.07.2026ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. S. Rathinamani, R. Kishore அவர்கள் அஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. D. Bhaskaran அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. Michael Marie Antony அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:24:39 +0530

தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்,

உத்தரவு

மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 உடன் இணைந்த விதி 3ன் படி மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ரூ.15,00,000/- இழப்பீடாக கோரி இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:-

மனுதாரர் கடந்த 03.01.2023-ம் தேதி இரவு சுமார் 09.10 மணியளவில் TN 06 F 7288 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் அடையாறு துர்காபாய் தேஷ்முக் முகப்பு சாலையில் திரு.வி.க. பாலம் முன்பாக சென்று கொண்டிருந்தபோது, அந்த நேரத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 15 D 5446 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்தில் மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாகவும், இந்த விபத்து இருசக்கர ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2,3ம் எதிர்மனுதாரர்களிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விபத்தில் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டதினால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.15,00,000/-மற்றும் வழக்கு செலவு தொகையும் வழங்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

2. (a) 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

2ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:24:46 +0530

என்றும், மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து நடந்துள்ளது என்றும், 3ம் நபர் காப்பீடு செய்யப்படவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எதிருரை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

2. (b) 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

3ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து நடந்துள்ளது என்றும், 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எதிருரை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள்:-

1. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட 03.01.2023-ம் தேதி இரவு சுமார் 09.10 மணியளவில் TN 15 D 5446 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவின் காரணத்தால் ஏற்பட்டதா?
2. யாரால் இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கது, எவ்வளவு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத் தக்கது?
3. அவ்வாறெனில் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கக்கூடியதா?
4. வேறு ஏதேனும் பரிகாரம் உண்டா?

4. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:24:51 +0530

ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரரின் இயலாமைச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் இருதரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ளது.

5. இரு தரப்பு வாதங்களின் சுருக்கம்

5.1. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரர் கடந்த 03.01.2023-ம் தேதி இரவு சுமார் 09.10 மணியளவில் TN 06 F 7288 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் அடையாறு துர்காபாய் தேஷ்முக் முகப்பு சாலையில் திரு.வி.க. பாலம் முன்பாக சென்று கொண்டிருந்தபோது, அந்த நேரத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 15 D 5446 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்தில் மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாகவும், இந்த விபத்து மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2,3ம் எதிர்மனுதாரர்களிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

5.2. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி மனுதாரரே விபத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவும், 3ம் நபர் காப்பீடு செய்யப்படவில்லை என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:24:56 +0530

5.3. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி மனுதாரரே விபத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதனால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

6. பிரச்சனை – 1க்கான தீர்வு:-

6.1. மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. ம.சா.1ன் சாட்சியம் மற்றும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மருத்துவ சான்றாவணங்கள் ம.சா.ஆ1 முதல் மசாஆ3, மசாஆ7 முதல் ம.சா.ஆ11 வரையிலான ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்ததில் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இந்த காயங்கள் மனுதாரர் சொல்வது போல் 03.01.2023-ம் தேதி ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்டதா என்பது குறித்து ஆராய்கையில், மேற்படி சாலை விபத்து நடந்தது குறித்து மனுதாரரின் சாட்சியங்களை தவிர இதர சாட்சிகளான சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் எவரும் மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. ஆனால், அதே சமயத்தில் மனுதாரர் தரப்பு வழக்கினை உறுதி செய்யும் வகையில், விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.4 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.2. மேற்கண்ட விபத்து குறித்து புகார் அளிக்கப்பட்டு சென்னை கிழக்கு அடையாறு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரரின் TN 15 D 5446 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளின் ஓட்டுநருக்கு எதிராக குற்ற எண்.31/2023-ல் இ.த.ச பிரிவுகள் 279, 338-ன் கீழ் 26.01.2023-ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இருப்பதாக அறிய முடிகிறது. அதேபோல், ம.சா.ஆ6 இறுதி அறிக்கை நகலில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதற்காக

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:01 +0530

இ.த.ச பிரிவுகள் 279, 338-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி ம.சா.1-ன் சாட்சியமும் நடந்த விபத்தை உறுதிபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. ம.சாஆ.4 முதல் தகவல் அறிக்கை, மசாஆ6 இறுதி அறிக்கை ஆகியவற்றினை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர் சொல்வது போல் ஒரு விபத்து நடந்துள்ளது என்பதை திட்டவட்டமாக அறிய முடிகிறது. மேலும் மனுதாரரே விபத்தில் காயமடைந்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே மனுதாரர் தரப்பில் வேறு கண்ணுற்ற சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

6.3. ம.சா.1ஐ, 2,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் தனித்தனியாக குறுக்கு விசாரணை செய்தபோதும் மனுதாரர் தரப்பு வழக்கினை பொய்ப்பிக்கும் விதமாக எதிர்சாட்சியம் எதுவும் பெறப்படமுடியவில்லை. 2,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், விபத்து நடந்த விதம் குறித்தும் மறுப்பு தெரிவித்திருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை. 1ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கின் சங்கதிகளை மறுக்க முன்வரவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் தான் இந்த விபத்திற்கு காரணம் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. அதன்படியே வினா எண்1-ற்கு விடை காண்கிறது.

<u>7. வினா எண் 2 முதல் 4 ற்கான தீர்வு :-</u>

விபத்தானது 03.01.2023 அன்று 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 15 D 5446 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரால் ஏற்பட்டது என்பது மேலே விவரித்த வகையில் திட்டவட்டமாக தீர்மானித்துள்ள நிலையில் மேற்படி வாகனத்திற்கான காப்பீட்டு சான்றிதழ் குறித்து பரிசீலனை செய்ததில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 15 D 5446 என்ற வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் தனிநபர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், 3ம் எதிர்மனுதாரரிடம் 3ம் நபர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன் காலவரையறையானது

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:06 +0530

23.01.2022 முதல் 22.01.2023 நள்ளிரவு வரை உள்ளது என்பது ம.சா.ஆ17ல் இருந்து அறிய முடிகிறது. 3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் காப்பீடு குறித்து கடுமையான ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தனிநபர் காப்பீடு மட்டும் உள்ளதாலும், மனுதாரர் காப்பீட்டிற்கு 3ம் தரப்பினர் என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவரல்ல. எனவே, மேற்படி விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தின் உரிமையாளர் என்ற வகையிலும், 3ம் எதிர்மனுதாரர் அதன் காப்பீட்டாளர் என்ற வகையிலும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவர். எனவே 3ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரது வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற வகையில், மேற்படி சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கான இழப்பீட்டினை வழங்க பொறுப்பானவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

8. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை :-

I.மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்:-

மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுகளுக்கான பில்கள் ம.சா.ஆ10ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை. எனவே மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பாக செலவினங்களுக்கு ரூ.14,784.42/-(ரூ.3,897/- இரசீது 2முறை வந்துள்ளதால் அதனை கழித்து) இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

II.போக்குவரத்து தொடர்பான இழப்பீடு:-

மனுவில் போக்குவரத்து செலவினத்திற்காக குறிப்பிட்டு ரூ.25,000/- கோரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான எந்த ஒரு ஆவணமும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து பரிசீலிக்கையில் மனுதாரர் விபத்திற்கு பிறகு Billroth Hospitals, Manikkavelayutham Hospital, Fortis Hospital, RTG Hospital மருத்துவமனையில் 03.01.2023, 12.01.2023, 17.01.2023 ஆகிய 3 நாட்கள் வெளிநோயாளியாக சிகிச்சை மேற்கொண்டதாக சாட்சியம் அளித்து ம.சா.ஆ1 முதல் மசாஆ3, மற்றும் ம.சா.ஆ7 முதல் ம.சா.ஆ11 வரையிலான ஆவணங்களிலிருந்து அறிய

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:14 +0530

முடிகிறது. எனவே, மருத்துவமனைக்கு சென்று வந்ததற்காக போக்குவரத்திற்கு நிச்சயம் செலவு செய்திருக்கக்கூடும் என்பதால், அதனடிப்படையில் போக்குவரத்துத் தொடர்பான செலவினங்களுக்காக மனுதாரர் ரூ.5,000/- இழப்பீடு பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

III.கூடுதல் போஷாக்கிற்கான இழப்பீடு:-

மனுவில் கூடுதல் போஷாக்கிற்கான செலவினம் என்பதாக குறிப்பிட்டு ரூ.35,000/- கோரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான எந்தவொரு ஆவணமும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து பரிசீலிக்கையில், மனுதாரருக்கு headache ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரருக்கு உடற்காயம் ஏற்பட்டிருப்பதையும் அதனை குணப்படுத்த கூடுதல் போஷாக்கு எடுத்திருக்ககூடும் என்பதை உணர முடிகிறது. எனவே, கூடுதல் போஷாக்கிற்காக கட்டாயம் மனுதாரர் செலவு செய்திருக்கக்கூடும் என்பதால் கூடுதல் போஷாக்கிற்கான செலவினங்களுக்காக மனுதாரர் ரூ.10,000/- பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

IV.உதவியாளர் செலவின தொடர்பான இழப்பீடு:-

தீர்மானிக்கப்பட்ட சட்ட வரையறை அடிப்படைக் கொள்கையின்படி சாலை விபத்தினால் பாதிக்கப்பட்ட நபருக்கு அவரது குடும்ப உறுப்பினர்களே இலவசமாக அருகில் இருந்து பெருந்தன்மையோடு சேவை மேற்கொண்டபோதிலும் பாதிக்கப்பட்ட நபர் உதவியாளர் செலவினம் தொடர்பாக இழப்பீடு பெறத்தக்கவராவார். CDJ 1982 DHC 147 – Delhi Transport Corporation and Anr. Vs. Kumari Lalith என்ற முன் தீர்ப்பில் மாண்புமிகு டில்லி உயர்நீதிமன்றம். “there cannot be any deduction if domestic help is obtained from a family member”, எனக் குறிப்பிட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்கையில், மனுதாரர் தரப்பில் உதவியாளர் செலவினம் தொடர்பாக இழப்பீடு கோருதல் குறித்து எவ்விதமான சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தாதபோதிலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:22 +0530

தன்மையை கொண்டு மனுதாரர் ரூ.5,000/- இழப்பீடு பெறத்தக்கவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

V.உடற்குறைபாடு மற்றும் அதனால் ஏற்படக்கூடிய நிரந்தர வருவாய் இழப்பு குறித்த இழப்பீடு:-

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் CDJ 2014 MHC 2726 – Royal Sundaram Alliance Vs. Mr. Hariharan என்ற முன்தீர்ப்புகளின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இம்மனுவில் மனுதாரருக்கு விபத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தினால் அவருக்கு நிரந்தர உடற்குறைபாடோ, அல்லது நிரந்தர பகுதி உடற்குறைபாடோ ஏற்பட்டுள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. மனுதாரர் தனது மனுவில் நிரந்தர உடற்குறைபாட்டிற்கான இழப்பீடாக ரூ.4,00,000/- கோரியுள்ளார். இது குறித்து ஆய்வு செய்கையில், விபத்தினால் மனுதாரருக்கு Locomotor, 2nd 3rd MT fracture right foot ஏற்பட்டதாக மருத்துவ ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது. மேலும் மனுதாரர் மருத்துவ வாரியத்திற்கு பரிந்துரைக்கபட்டு, மருத்துவ வாரியம் மனுதாரருக்கு 19% நிரந்தர இயலாமை ஏற்பட்டிருப்பதாக நீ.ம.சா.ஆ.1 சான்றிதழ் வழங்கியுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அவரது வருமானம் ஈட்டும் திறனை பாதிப்பதாக இல்லை. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையின் அடிப்படையில் (மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற இரு அமர்வு Future General India Insurance vs Manivannan, Judgement Dated 15.06.2022 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற CMA No.1551/2024 Judgement Dated 10.07.2024 மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற **Govindammal alias Govindhi Vs S.Manikandan and another in CMA No.1449/2026 dated 03.07.2026)** மனுதாரருக்கு சதவிகித அடிப்படையில் இழப்பீடு வழங்கலாம் என்று தீர்மானித்து ரூ.2,09,000/- (11,000/- x 19)ம் இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

VI.பகுதி வருவாய் இழப்பீடு:-

மனுதாரர் விபத்து சமயத்தில் Advocate வேலை செய்து மாதம் ரூ.40,000/- சம்பாதித்தாக ம.சா.1 மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மசாஆ13 பணி

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:28 +0530

அடையாள அட்டை குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் தொழில் மற்றும் வருமானத்தை உரிய சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்கவில்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற இரு அமர்வு Andal vs Avinanv Kannan order Dated 09.10.2018 முன்தீர்ப்பின் அடிப்படையில் 2023-ல் மனுதாரரின் குறைந்தபட்ச மாத வருமானமாக ரூ.16,700/- வருகிறது. எனவே, மனுதாரரின் மாத வருமானமாக ரூ.16,700/- கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் காரணமாக சுமார 3 மாத காலம் பணிக்கு செல்லாமல் ஓய்வில் இருத்திருக்க கூடும் என்பதால் ரூ.50,100/-ஐ இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

<u>VII.வலி மற்றும் வேதனை குறித்த இழப்பீடு:-</u>

தீர்மானிக்கப்பட்ட சட்டவரையறை அடிப்படைக்கொள்கையின்படி வலி மற்றும் எதிர்கால அசௌகரியம் குறித்த இழப்பீட்டிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை நிர்ணயிக்க முடியாது. இது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைக்கும் ஏற்ப மாறுபடக்கூடியதாகும். மனுதாரர் பெற்ற சிகிச்சையின் அடிப்படையில் அவருக்கு வலி மற்றும் வேதனை ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதனாலும், அதனால் எதிர்காலத்தில் அசௌகரிய குறைவுகள் மனுதாரருக்கு ஏற்படக்கூடும் என்பதனாலும், மனுதாரர் வலி மற்றும் எதிர்கால அசௌகரியம் குறித்த இழப்பீடு பெறத்தக்கவராவார். மேலும் Satya Narain -Vs- Jai Kishan FAO No.:709/02 dated: 02.02.2007. என்ற முன் தீர்ப்பில் மாண்புமிகு டில்லி உயர்நீதிமன்றம் வழிகாட்டுதலின் படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் காரணத்தினால் மனுதாரர் அடைந்த வலி மற்றும் வேதனைக்காக ரூ.60,000/- இழப்பீடாக வழங்குவது நீதிக்கு உகந்ததாக இருக்குமென இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

<u>VIII. விபத்தினால் ஏற்பட்ட வசதி வாய்ப்பு இழப்பு:-</u>

மனுதாரர் விபத்திற்கு பிறகு Billroth Hospitals, Manikkavelayutham Hospital, Fortis Hospital, RTG Hospital மருத்துவமனையில் 03.01.2023, 12.01.2023, 17.01.2023 ஆகிய 3 நாட்கள் வெளிநோயாளியாக சிகிச்சை மேற்கொண்டதாக சாட்சியம் அளித்து ம.சா.ஆ1 முதல் மசாஆ3, மற்றும் ம.சா.ஆ7 முதல் ம.சா.ஆ11 வரையிலான ஆவணங்களிலிருந்து அறிய

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:34 +0530

முடிகிறது. மனுதாரர் மேற்கண்ட காலத்திலும் அதற்கு பின்னிட்டு காயங்கள் குணமாக எடுத்துக்கொண்ட காலத்திலும் மனுதாரருக்கு அன்றாட வாழ்க்கை நடைமுறை வசதி வாய்ப்பு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்பதால் விபத்தினால் ஏற்பட்ட வசதி வாய்ப்பு இழப்புக்கு ரூ.30,000/- இழப்பீடாக மனுதாரர் பெறத்தக்கவர் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

IX. இழப்பீடு குறித்த கணக்கீடு:-

மேற்கண்ட சாராம்சங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு கிடைக்கத்தக்க மொத்த இழப்பீடு ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

வ.எண்.	பொருள்	தொகை
1.	மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்	ரூ.14,784.42/-
2.	போக்குவரத்து தொடர்பான இழப்பீடு	ரூ.5,000/-
3.	கூடுதல் போஷாக்கிற்கான இழப்பீடு	ரூ.10,000/-
4.	உதவியாளர் செலவின தொடர்பான இழப்பீடு	ரூ.5,000/-
5.	உடற்குறைபாடு மற்றும் அதனால் ஏற்படக்கூடிய நிரந்தர வருவாய் இழப்பு குறித்த இழப்பீடு	ரூ.2,09,000/-
6.	பகுதி வருவாய் இழப்பீடு	ரூ.50,100/-
7.	வலி மற்றும் வேதனை குறித்த இழப்பீடு	ரூ.60,000/-
8.	விபத்தினால் ஏற்பட்ட வசதி வாய்ப்பு இழப்பு	ரூ.30,000/-
	மொத்த இழப்பீட்டுத் தொகை	**ரூ.3,83,884.42/-**

மேற்கண்ட விவாதங்களிலிருந்து மனுதாரருக்கு மொத்தம் **ரூ.3,83,884.42/-** என்பதை முழுமையாக **ரூ.3,83,900/-** இழப்பீட்டுத் தொகையாக கிடைக்கக்கூடியது என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2026.08.13 18:25:39 +0530

9. முடிவில்,

இம்மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கான மொத்த சரியான இழப்பீடாக **ரூ.3,83,900/-** வழங்க வேண்டும் என்பதாக இத்தீர்ப்பாயம் நிர்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

A) மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை **ரூ.3,83,900/-** மற்றும் அதற்கான பின் வட்டியை மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை 7.5 சதவீத ஆண்டு வட்டியுடன், மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்துக் கொண்டு செலுத்த உத்தரவிடப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>B) தொகை செலுத்ததுவதற்கான நிபந்தனை உத்தரவு</u>

(a) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் மனுதாரர் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.375/-ஆகும். மேற்கண்ட தொகை போக மீதி செலுத்தப்பட வேண்டிய நீதிமன்ற கட்டணம் ரூ.2,836.50/-ஆகும். மனுதாரருக்கு செலவுத்தொகை செலுத்த கடமைப்பட்டுள்ள 3ம் எதிர்மனுதாரரே (இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு செலுத்துவதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க வேண்டி)இவ்வுத்தரவு தேதியில் இருந்து 15 தினங்களுக்குள் (Deficit Court Fee) மீதி நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் தனியாக (Separate Deposit) இத்தீர்ப்பாயத்தின் கணக்கான "Registrar (MACT), Court of Small Causes, Chennai Account No. 7103261207 IFSC No. IDIB000M157 Indian Bank, Madras High Court Branch, Chennai" என்பதில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் இது குறித்த தகவலை MCOP எண்ணையும் UTR எண்ணையும் குறிப்பிட்டு இத்தீர்ப்பாயத்திற்கு உரிய படிவம் (The format and procedure already directed by Hon'ble Madras High court in Suo Motu W.P. No. 12935 of 2021) மூலமாகவும் e-Mail (chnccc.sccmcop1-tn@indiancourts.nic.in) மூலமாகவும் 48 மணிநேரத்தில் தெரிவிக்க (The Manager, The Oriental Insurance Co. Ltd. -Vs- D Salsa and others, 2026 LiveLaw (Mad) 360) உத்தரவிடப்படுகிறது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:44 +0530

(b) மேற்கண்ட நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட பிறகு, மாண்புமிகு உச்ச நீதிமன்ற **"பர்மிந்தர் சிங் -எதிர்- ஹனி கோயல் மற்றும் பலர்", 2025 INSC 361** முன்தீர்ப்பு வழிகாட்டுதலின்படி 3ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் வங்கி கணக்கிலேயே **நேரடியாக** இழப்பீட்டு தொகை மற்றும் அதனுடன் கூடிய வட்டியை மட்டும் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும், இது குறித்த தகவலை MCOP எண்ணையும் UTR எண்ணையும் குறிப்பிட்டு இத்தீர்ப்பாயத்திற்கு உரிய படிவம் (The format and procedure already directed by Hon'ble Madras High court in Suo Motu W.P. No. 12935 of 2021) மூலமாகவும் e-Mail (chnccc.sccmcop1-tn@indiancourts.nic.in) மூலமாகவும் 48 மணிநேரத்தில் தெரிவிக்க உத்தரவிடப்படுகிறது.

c) மனுதாரரின் இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டியை செலுத்துவதற்ககுண்டான வங்கி கணக்கு விபரங்கள்:-

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code
State Bank of India, Santhome	Ac NO: 10013271224 IFSC : SBIN0005797

d) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.10,678/- நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மனுவுக்கான செலவுத் தொகை ரூ.13,954.50/- ஆகும். செலவுத் தொகையை (include Advocate fee) 2ம் எதிர்மனுதாரர் இவ்வுத்தரவு தேதியில் இருந்து 30 தினங்களுக்குள் தனியாக (Separate Deposit) இத்தீர்ப்பாயத்தின் கணக்கான "Registrar (MACT), Court of Small Causes, Chennai Account No. 7103261207 IFSC No. IDIB000M157 Indian Bank, Madras High Court Branch, Chennai" என்பதில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் இது குறித்த தகவலை MCOP எண்ணையும் UTR எண்ணையும் குறிப்பிட்டு இத்தீர்ப்பாயத்திற்கு உரிய படிவம் (The format and procedure already directed by Hon'ble Madras High court in Suo Motu W.P. No. 12935 of 2021) மூலமாகவும் e-Mail (chnccc.sccmcop1-tn@indiancourts.nic.in) மூலமாகவும் 48 மணிநேரத்தில் தெரிவிக்க (The Manager, The Oriental Insurance Co. Ltd. -Vs- D Salsa and others, 2026 LiveLaw (Mad) 360) உத்திரவிடப்படுகிறது. மேற்கண்ட

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:49 +0530

தொகையை மனுதாரரின் வழக்கறிஞர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

e) மனுதாரரின் வங்கி கணக்கு செயல்பாட்டில் இல்லாதது, முடிக்கப்பட்டது, தவறானது அல்லது 3ம் எதிர்மனுதாரரால் செலுத்தப்படும் பணம் செலுத்தம் வேறு ஏதேனும் காரணத்தினால் மின்னணு பணப்பரிமாற்றம் திரும்பப் பெறப்பட்டலோ, திருப்பி அனுப்பப்பட்டாலோ அல்லது தோல்வியடைந்தாலோ மட்டுமே, 3ம் எதிர்மனுதரர் காப்பீட்டு நிறுவனம் அது குறித்த ஆதரவு ஆவணங்களுடன் இந்த தீர்ப்பாயத்திற்கும் சம்பந்தப்பட்ட மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞருக்கும் தெரிவிக்க வேண்டும். மனுதாரர் அத்தகைய அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் சரியான மற்றும் செயல்பாட்டில் உள்ள வங்கி கணக்கு விவரங்களை இந்தத் தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இந்தத் தீர்ப்பாயத்தில் நிர்ணயிக்கப்படும் காலத்திற்குள் திருத்தப்பட்ட வங்கி கணக்கிற்கு இழப்பீடு தொகையை மீண்டும் நேரடியாக செலுத்த வேண்டும். அத்தகைய தவறான அல்லது செயல்பாட்டில் இல்லாத கணக்கு விவரங்களால் ஏற்படும் எந்தவொரு கால தாமதத்திற்கும், 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் கூடுதல் வட்டிக்கு பொறுப்பாகாது.

f) 3ம் எதிர்மனுதாரர் மேற்படி தொகைகளை உரிய காலத்தில் செலுத்த தவறும் பட்சம், மனுதாரர் மீதி நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் செலுத்தி ஒப்புகை பெற்ற பின்னர், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக உத்தரவை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து=தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:25:55 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-

ம.சா.1 - திரு. கருப்பன் (மனுதாரர்)

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	எக்ஸ்ரே
ம.சா.ஆ.2	விபத்து பதிவேடு நகல்
ம.சா.ஆ.3	வெளிநோயாளிக்கான சீட்டு
ம.சா.ஆ.4	முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.5	மாதிரி வரைபட நகல்
ம.சா.ஆ.6	இறுதி அறிக்கை நகல்
ம.சா.ஆ.7	வெளிநோயாளிக்கான சீட்டு
ம.சா.ஆ.8	வெளிநோயாளிக்கான சீட்டு
ம.சா.ஆ9	வெளிநோயாளிக்கான சீட்டு
ம.சா.ஆ10	மருத்துவ சிகிச்சைக்கான இரசீதுகள்
ம.சா.ஆ11	காயச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ12	போட்டோக்கள்
ம.சா.ஆ13	மனுதாரரின் பணி அடையாள அட்டை நகல்
ம.சா.ஆ14	மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல்
ம.சா.ஆ15	மனுதாரரின் பான் அட்டை நகல்
ம.சா.ஆ16	1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ17	1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ18	மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ19	மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தக முதல் பக்க நகல்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:26:00 +0530

2,3ம் எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் :- இல்லை

2,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:-

நீ.ம.சா.ஆ.1	இயலாமைச் சான்றிதழ்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:26:04 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மற்ற விவரங்கள்

மனு தாக்கல் செய்த தேதி	21/02/2023
தீர்ப்பு நாள்	13.08.2026
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ.15,00,000/-
தீர்ப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை	**ரூ.3,83,900/-**
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.3,211.50/-
ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்	ரூ.375/-
மீதி செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.2,836.50/-

செலவு பட்டியல்

செலவு விவரங்கள்	**தொகை**
விருது தொகைக்கான முத்திரை வரி	ரூ.3,211.50/-
வக்காலத்து நாமா	ரூ.5.00
சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம்	ரூ.60.00

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:26:09 +0530

வழக்கறிஞர் கட்டணம்	ரூ.10,678/-
மொத்தம்	ரூ.13,954.50/-

S VADIVEL Digitally signed by S VADIVEL
Date: 2026.08.13 18:26:13 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

Additional court fee paid, MPSR.No…...….........; dated……………..

(SPL-I, SSJ)